உ

ஆடக மதுரை அரசே போற்றி ! சிவமயம் கூடல் இலங்கு குருமணி போற்றி !

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை.

# ஆடி முளைக்கொட்டுத் திருவிழா அழைப்பிதழ்

## 03.08.2016 - 13.08.2016



விண்கண்ட தெய்வம்பல் கோடி உண்டேனும் விளம்பில் உன் போல்

கண்கண்ட தெய்வம் உளதோ அன்னை மீனாட்சி தாயே!!

உ

ஆடக மதுரை அரசே போற்றி ! சிவமயம் கூடல் இலங்கு குருமணி போற்றி !

## அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை.

# ஆடி முளைக்கொட்டுத் திருவிழா அழைப்பிதழ்

பேரன்புடையீர் ! வணக்கம்

**அ**ருட்நோக்கின் சிகரமாய் அ(ம்)ங்கயற்கண்ணியாகவும், **ஆ**ணவ மலத்தை வேரறுக்கும் ஆலவாய்க்கரசியாகவும், **இ**கபரசுகங்களை நல்கும் இமவான் மகவாவும், **ஈ**ரேழு புவனங்களை கண்ணிமையாமல் காக்கும் கன்னியரசியாகவும், **உ**யிர்களிடத்தில் உன்னத அன்பு உள்ளம் கொண்டவளாகவும், **ஊ**ழ்வினை தீர்க்கும் உக்கிர பெருவழுதியின் தாயான உமையவளாகவும், **எ**மபயத்தை நீக்கியருளும் ஏற்றுயர் கொடியானின் எழிலரசியாகவும், **ஏ**ழ்பிறவிகளை களையும் ஏற்றமிகு தாயுள்ளம் கொண்டவளாகவும், **ஐ**ந்தாடல்புரியும் அய்யனின் அருந்துணையாகவும் அருட்துணையாகவும் (அருளது சக்தியாகும் அரன்தனக்கு) **ஒ**ண் தமிழின் ஓசையில் **ஓ**ங்கரமாய் ஒலிப்பவளாகவும், **ஔ**டதமாய் (மருந்தாய்) ஆன்மாக்களின் அவலம் (அகஇருள்) நீக்கி அறிவொளி ஏற்றும் அருள்மிகு அங்கயற்கண்ணியாகவும் திகழ்கின்றார்.

மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் நடைபெறுகின்ற திருவிழாக்களில் அருள்மிகு மீனாட்சி அம்மனுக்கு மட்டும் ஆடி முளைக்கொட்டுத் திருவிழா, ஐப்பசி கோலாட்ட உற்சவம், புரட்டாசி நவராத்திரி கலைவிழா, மார்கழி எண்ணெய்க்காப்புத் திருவிழா முதலானவை குறிப்பிடத்தக்கவை. இதில் ஆடி முளைக் கொட்டுத் திருவிழாவில் அம்மன் சன்னதி முன்புள்ள கொடிமரத்தில் கொடியேற்றப்பட்டு, அருள்மிகு மீனாட்சி அம்மன் காலை, மாலை வேளைகளில் பல்வேறு வாகனங்களில் எழுந்தருளி ஆடிவீதிகளில் வலம் வருவார். நிகழும் திருவள்ளுவர் ஆண்டு - 2047 வருடம் 1426 - ஆம் பசலி ஆடி மாதம் 19-ஆம் தேதி முதல் ஆடி மாதம் 29-ஆம் தேதி வரை **03.08.2016 புதன்கிழமை முதல் 13.08.2016 சனிக்கிழமை வரை** **ஆடி முளைக்கொட்டுத் திருவிழா** நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ளபடி நடைபெறும்.

05.08.2016 ஆடி மாதம் 21 - ஆம் நாள் வெள்ளிக்கிழமை திருவாடிப்பூரத்தன்று உச்சிக்கால பூஜை வேளையில் அருள்மிகு மூலஸ்தான அம்மனுக்கும் உற்சவ அம்மனுக்கும் ஏற்றி இறக்கும் வைபவம் நடைபெறும்.

10.08.2016 புதன்கிழமை அருளாளர் சுந்திரமூர்த்தி நாயனார் குருபூஜை. அன்றைய தினம் மாலை 4.00 மணிக்கு அருளாளர் சுந்தரமூர்த்தி நாயனார், சேரமான் பெருமாள் நாயனார் முறையே வெள்ளியானை, குதிரை வாகனங்களில் எழுந்தருளி ஆவணி மூல வீதிகளில் திருவீதி உலா வந்த பின் மாலை 6.30 மணிக்கு பழைய திருக்கல்யாண மண்டபத்தில் திருக்கயிலாயக் காட்சி நடைபெறும்.

10.08.2016 இரவு அருள்மிகு மீனாட்சியம்மன் ஆடி வீதிகளில் வலம் வந்த பின் உற்சவர் சன்னதியில் அம்மன் - சுவாமி மாலை மாற்றும் வைபவம் நடைபெறும்.

பக்தர்கள் அனைவரும் வருகை தந்து அருள்மிகு மீனாட்சி அம்மனின் திருவருளைப் பெற்றுய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**குறிப்பு :- தினசரி இரவு அம்மன் புறப்பாட்டின் போது பிரபல நாதஸ்வர கலைஞர்கள் மற்றும் தவில் வித்வான்களின் சிறப்பு நாதஸ்வர இன்னிசை நிகழ்ச்சி நடைபெறும்.**

**கருமுத்து தி.கண்ணன்**
தக்கார்

**நா.நடராஜன்,** எம்.எஸ்சி., பி.எல்.,
இணை ஆணையர் / செயல் அலுவலர்

ஆடக மதுரை அரசே போற்றி !

கூடல் இலங்கு குருமணி போற்றி !

# நிகழ்ச்சி நிரல்

| நாள் மற்றும் கிழமை | மண்டபங்கள் விபரம் | அம்மன் எழுந்தருளும் வாகனங்கள் புறப்பாடாகும் வீதி மற்றும் நேரம் | | விபரம் |
|---|---|---|---|---|
| | | காலை | இரவு | |
| **03.08.2016 ஆடி - 19 புதன்** | | | | வாஸ்து சாந்தி |
| **04.08.2016 ஆடி - 20 வியாழன்** | கட்டளைதாரர் - திரு. **எம்.சுவாமிநாதன்,** கண்காணிப்பாளர், (ஓய்வு) இந்து சமய அறநிலையத்துறை மதுரை. | **வெள்ளி சிம்மாசனம்** காலை 9.00 மணிக்கு மேல் | **சிம்ம வாகனம்** இரவு 7.00 மணி ஆடி வீதி | காலை 10.00 நாழிகைக்கு மேல் 11.00 நாழிகைக்குள் காலை 10.30 மணிக்கு மேல் 10.54 மணிக்குள் கன்னியா லக்கனத்தில் **கொடியேற்றம்** |
| **05.08.2016 ஆடி - 21 வெள்ளி** | **கோயிலுக்குள் கிளிக்கூடு மண்டபம்,** கட்டளைதாரர் - **எஸ்.ஆர்.சாம்பசிவம்** குடும்பத்தார், மதுரை | | **வெள்ளி சிம்மாசனம்** இரவு 7.00 மணி ஆடி வீதி | **ஆடிப்பூரம்** |
| **06.08.2016 ஆடி - 22 சனி** | **கிளிக்கூடு மண்டபம்,** கட்டளைதாரர் - **ஆர்.வெங்கடாசலம்,** அபர்ணா அய்யர், USA., | **தங்கச்சப்பரம்** காலை 9.00 மணி ஆடி வீதி | **தங்க காமதேனு வாகனம்** இரவு 7.00 மணி ஆடி வீதி | |
| **07.08.2016 ஆடி - 23 ஞாயிறு** | **கிளிக்கூடு மண்டபம்,** | **தங்கச்சப்பரம்** காலை 9.00 மணி ஆடி வீதி | **யானை வாகனம்** இரவு 7.00 மணி ஆடி வீதி | |
| **08.08.2016 ஆடி - 24 திங்கள்** | **திருகல்யாண மண்டபம்** கட்டளைதாரர் - தானகோனேரியப்ப முதலியார் கட்டளை | **தங்கச்சப்பரம்** காலை 9.00 மணி ஆடி வீதி | **வெள்ளி ரிஷப வாகனம்** இரவு 7.00 மணி ஆடி வீதி | |
| **09.08.2016 ஆடி - 25 செவ்வாய்** | **திருவள்ளுவர் கழகம் வடக்காடி வீதி மண்டபம்** கட்டளைதாரர் - திருமங்கலம் க்ஷத்திரிய நாடார்கள் உறவின்முறை | **தங்கச்சப்பரம்** காலை 9.00 மணி ஆடி வீதி | **கிளி வாகனம்** இரவு 7.00 மணி ஆடி வீதி | |
| **10.08.2016 ஆடி - 26 புதன்** | **கிளிக்கூடு மண்டபம்** | **தங்கச்சப்பரம்** காலை 9.00 மணி ஆடி வீதி | பெரிய மறவர் தெரு. **பா.ஞா.கருப்பணத்தேவர் பார்.கெ.ஜோதிரத்தினம்மாள்** உபய புஷ்பப்பல்லக்கு இரவு 7.00 மணி ஆடி வீதி | அருள்மிகு சுந்தரமூர்த்தி நாயனார் திருபுவன மாலை 4.00 மணிக்கு அருள்மிகு சுந்தரமூர்த்தி நாயனார், சேரமான் பெருமான் நாயனார் முன்செல்ல வெள்ளி யானை, குதிரை வாகனங்களில் எழுந்தருளி ஆவணி மூல வீதிகளில் திருவீதி உலா வந்த பின், மாலை 6.30 மணிக்கு மாதவ திருக்கல்யாண மண்டபத்தில் **திருக்கயிலைக்காட்சி** நடைபெறும். இரவு புஷ்பப்பல்லக்கில் அம்மன் ஆடி வீதி வலம் வந்த பின், உற்சவ சந்நிதியில் **அம்மன் சுவாமி மாலை மாற்றும் வைபவம்.** |
| **11.08.2016 ஆடி - 27 வியாழன்** | **ஆறாவணி சுப்பையர் மண்டபம்** | **தங்கச்சப்பரம்** காலை 9.00 மணி ஆடி வீதி | **தங்கக்குதிரை வாகனம்** இரவு 7.00 மணி ஆடி வீதி | |
| **12.08.2016 ஆடி - 28 வெள்ளி** | **மீனாட்சி நாயக்கர் மண்டபம்** கட்டளைதாரர் - வழக்கறிஞர் **கண்ணன்** குடும்பத்தினர், மதுரை | காலை 9.30 மணிக்கு மேல் 9.54 மணிக்குள் கன்னியா லக்கனத்தில் **சட்டத்தேர்,** சித்திரை வீதி | **புஷ்ப விமானம்** இரவு 7.00 மணி ஆடி வீதி | இரவு மீனாட்சி நாயக்கர் மண்டபத்தில் **சைத்தோபசாரம்** |
| **13.08.2016 ஆடி -29 சனி** | **கிளிக்கூடு மண்டபம்** கட்டளைதாரர் - **சி.சந்திரசேகரன் - சி.சுப்புலெட்சுமி** & குடும்பத்தினர், சென்னை | | **கனக தண்டியல்** இரவு 7.00 மணி ஆடி வீதி | பொற்றாமரைக்குளக்கரையில் **தீர்த்தம்,** திருவிழா நிறைவு |

## சேவைக்கட்டண விபரம்

ஆடக மதுரை அரசே போற்றி ! கூடல் இலங்கு குருமணி போற்றி !

| | |
|---|---|
| உபய வைரக்கீரிட சேவைகட்டணம் | ரூ. 5001/- |
| உபய திருக்கல்யாண உற்சவக் கட்டணம் | ரூ. 1501/- |
| தங்கரத புறப்பாட்டுக் கட்டணம் | ரூ. 1501/- |
| அம்மன் மற்றும் சுவாமி ஒருகால அபிஷேகக் கட்டணம் | ரூ. 1300/- |
| அருள்மிகு பத்ரகாளி, முக்குறுணி விநாயகர் அபிஷேகக் கட்டணம் ( சந்நிதி 1க்கு) | ரூ. 1000/- |
| அருள்மிகு தட்சணாமூர்த்தி, மகாலெட்சுமி, துர்க்கை, சரஸ்வதி போன்ற தெய்வங்களுக்கு அபிஷேகக் கட்டணம் (சந்நிதி 1க்கு) | ரூ. 550/- |
| அருள்மிகு தட்சணாமூர்த்தி, மகாலெட்சுமி, துர்க்கை, சரஸ்வதி போன்ற தெய்வங்களுக்கு சந்தனக்காப்பு அலங்காரம் செய்ய கட்டணம் (சந்நிதி 1க்கு) | ரூ. 1000/- |
| அருள்மிகு பத்ரகாளி, முக்குறுணி விநாயகர் போன்ற தெய்வங்களுக்கு சந்தனக்காப்பு அலங்காரம் செய்ய கட்டணம் (சந்நிதி 1க்கு) | ரூ. 2250/- |
| சித்தர் சந்நிதி பூக்கவடாரச் சேவைக்கட்டணம் | ரூ. 500/- |
| முக்குறுணி விநாயகர் கொழுக்கட்டை நெய்வேத்தியம் | ரூ. 15000/- |

## அன்னதானத்திட்டம்

### "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே "

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா** அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட அன்னதானத் திட்டம் இத்திருக்கோயிலில் செயல்பாட்டில் உள்ளது. நல்ல சுகாதார முறைப்படி உணவு தயாரிக்கப்பட்டு வெளியூர் மற்றும் உள்ளூர் பக்தர்களுக்கு நண்பகல் 12.00 மணிக்கு பரிமாறப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் பங்குகொள்ள விரும்பும் உபயதாரர்கள் கீழ்கண்டுள்ள விபரப்படி தொகை செலுத்தினால், அவரது பிறந்தநாள், திருமணநாள், மற்றும் முன்னோர்களின் நினைவுநாள் அல்லது உபயதாரர் குறிப்பிடும் நாள், இவற்றில் ஏதேனும் ஒரு நாளில் அன்னதானம் வழங்கப்படும்.

இத்திட்டத்திற்கு வழங்கும் நன்கொடைகளுக்கு வருமானவரி சட்டப்பிரிவு 80(ஜி)–ன் கீழ் வரிவிலக்கு உண்டு

| திருக்கோயில் விபரம் | ஒருநாள் அன்னதானம் செய்வதற்கு | வருடத்தில் ஒரு நாள் அன்னதானம் செய்வதற்கு (ஒரே முறை நிரந்தர முதலீடு செய்தல்) |
|---|---|---|
| அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை (200 நபர்கள்) | ரூ. 4000/- | ரூ. 40000/- |
| அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், தெப்பக்குளம், மதுரை (100 நபர்கள்) | ரூ. 2000/- | ரூ. 25000/- |
| அருள்மிகு திருவாப்புடையார் திருக்கோயில், செல்லூர், மதுரை (100 நபர்கள்) | ரூ. 2000/- | ரூ. 25000/- |
| அருள்மிகு திருமறைநாதர் சுவாமி திருக்கோயில், திருவாதவூர், மேலூர், மதுரை (50 நபர்கள்) | ரூ. 1000/- | ரூ. 10000/- |
| அருள்மிகு முக்தீஸ்வரர் திருக்கோயில், தெப்பக்குளம் மதுரை (50 நபர்கள்) | ரூ. 1000/- | ரூ. 10000/- |

## வலைதள சேவை

இத்திருக்கோயிலில் நடைமுறையில் உள்ள அனைத்து சேவைகளையும் திருக்கோயிலின் வலைதள முகவரியான **www.maduraimeenakshi.org** - ன் மூலம் முன்பதிவு செய்து கொள்ளலாம்.

நன்கொடைகள் மற்றும் சேவைக்கட்டணங்களை வரைவோலை மற்றும் காசோலை மூலமாகவும் செலுத்தலாம்.

e-pooja — நன்கொடை அனுப்பவேண்டிய முகவரி — e-donation


## இணை ஆணையர்/செயல் அலுவலர்

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் மதுரை - 625001. தபால் பெட்டி எண் : 100.

தொலைபேசி எண்கள்:

அலுவலகம் : 0452-2344360, உள்துறை : 0452-2349868, பிர்லா தங்கும் விடுதி : 0452-2345503

Website : www.maduraimeenakshi.org Email: info@maduraimeenakshi.org jc@maduraimeenakshi.org



என்றென்றும் இறைபணியில்



சுகந்தி உடனடி சாம்பிராணி இயற்கையானது